கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௩அ.] விக்கிரம ஹூ மாசி மீ [பகுதி—௪.
Vol. 38. February—March 1941. No. 4.

கம்பராமாயணசாரம்

[ஸ்ரீ. ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள், G.B.V.C.]

௧௩0-ஆம் பக்கத் தொடர்ச்சி.

மருத்துமலைப்படலம்

[அநுமான், சஞ்சீவிபருவதத்தைக் கொண்டுவந்து, பிரமாத்திரத்தினால் இறந்துகிடந்த இலக்குமணாதியரைப் பிழைப்பித்ததைக் கூறுவது.

வீடணன் போர்க்களத்தைப் பார்த்தல்

இராமன் விரும்பியபடி உணவுகளைக் கொணரச்சென்றிருந்த வீடணன், தான் கொண்டுவந்த உணவுகளைப் படைவீட்டில் வைத்துவிட்டுப் போர்க்களத்துக்குவந்தான். வந்தவன், அந்தப் படுகளத்திற் பட்டுக்கிடந்தவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டு, விடமுண்டவர்போலத் தியங்கி உணர்வுநீங்கினான். பின்பு, உணர்வு திரும்பப்பெற்றபோது, ஏங்கி வருந்திப் பெருமூச்சுவிட்டு, நாயும் பேயும் நரியும் தன்னைக் கண்டு விலகியோடச் சென்று, இராமலக்குமணர்களைக் கண்டான்.

உயிரோடுங்கிக்கிடக்கும் இராமலக்குமணரைக் கண்ட வீடணன் தன்மை

வீடணனுக்கும் இராமலக்குமணருக்கும் இடையே உள்ள அன்பை என்னென்பது! உடலும் உயிரும் உண்டானபின்பே அன்பு உண்டாமாதலால், அவை, முற்பட்டனவென்றாலும், அவை,

அது உண்டாவதற்கிடமாய், அவைகளையுடையவன் அதனேடிருத்தற்காகவேயுள்ளன. அவை, அதற்குக் காலத்தால் முந்தினவேயன்றிப் பயனுற் பிந்தினவேயாம். 'அன்பின் தன்மையை அறிதல் அருமையினும் அருமையானது. அத்தன்மையை அறிந்தவர் பரம்பொருளையே அறிந்தவராவர்'*

இராமன் இறக்கவில்லையென்று விபீடணன் அறிதல்

இராமலக்குமணர்நிலையைக் கண்டதனுல் போய்விடுவதாக இருந்த விபீடணனது உயிர், அவர்களுக்கு அழிவில்லையென்பதை அவன் நினைந்ததனுல், போகாது தங்குவதாயிற்று. துன்பமிகுதியால் தற்காலநிலைமையை முதலில் ஆராயாதிருந்தவன், துன்பம் சிறிதுகுறைவானபோது, ஆராய்வானுகி, இராமனுடலில் வடுவில்லாமையைநோக்கி, நடுக்கம் நீங்கினுன். இலக்குமணனுக்கும் வானரருக்கும் உயிரொடுங்கியகாரணம் பிரமாத்திரமென்றும் அதனை எய்தவன் இந்திரசித்தே என்றும் தம்பிநிலைகண்டு சகிக்கமாட்டாமல் இராமன் மூர்ச்சித்திருக்கிருனென்றும் அறிந்து, நிகழ்ந்துள்ள விபத்தை நீக்குதற் கேற்ற உபாயம் யாதென ஆலோசித்தான்.

இராமன் இறந்திலனென்ருலும் உயிரொடுங்கியிருக்கும் இலக்குமணன் உண்மையாக இறந்துவிட்டால் அதன்பின் உயிர் துறவாதிரானென்றும், அப்படியானுல் வஞ்சகவாழ்க்கையரான அரக்கரன்றே வென்ருராவரென்றும் எண்ணிக் கண்ணீர்வடித்தான். பின்பு தேறி, நாகபாசம் பயனற்றுப்போனதுபோலப் பிரமாத்திரமும் அவமாயொழியுமென்றும் இலக்குமணன் இறவானென்றும் உயிரொடுங்கிக்கிடக்கும் வானரரும் மீண்டிடுவாரென்றும் இராவணன் நிலையானவெற்றியை அடையானென்றும் எண்ணி, நெஞ்சம் (தடுமாற்றம்நீங்கி) நிலைநிற்கப்பெற்ருன்.

விபீடணன் அனுமானைக் கண்டு மூர்ச்சை தெளிவித்தல்

பின்பு, அவன் இந்த ஆபத்துக்காலத்தில் உதவத்தக்கவர் யாரேனும் உயிரோடிருக்கின்ருர்களோவென்று தேடிக் காண்பேனென்று ஒரு கொள்ளிக்கட்டையைக் கையிற்கொண்டு திரிந்த

* 'அன்பென்ப தொன்றின் தன்மை யமரரும் அறிந்த தன்ருல்'
(இப்படலம் நான்காம்செய்யுளின் இறுதி அடி.)

'அன்பேசிவம்' (திருமூலர் திருமந்திரம்)

போது, (தன்வலியை அடக்கிய பிரமாத்திரத்தின்மீது கொண்ட கோபத்தினல்) தீப்பொறிசிதறும் செங்கண்ணும் மடித்த வாயும் முறுக்கிய கையுமாக, ஆனைப் பிண அமளி*மீதே மேருப்பெருமலை போலக் கிடந்த காய்சினத்து அனும னென்னும் கடல்கடந்தானைக் கண்டான்.† கண்டு, கண்ணீர்சொரிந்துகொண்டு, 'உயிர் உண்டு' என்று எண்ணி, உடலிற் புதைந்திருந்த அம்புகளை ஒவ்வொன்ருக மெல்லென நோவாமல் வாங்கிக் குளிர்நீர்கொண்டுவந்து முகத்திலே தெளித்துத் தெளிவுபிறக்கச்செய்தான்.]

146 உயிர்ப்புமுன் னுதித்த பின்னர் உரோமங்கள் சிலிர்ப்ப வூடு[1]
வியர்ப்புள தாகக் கண்கள் விழித்தன[2] மேனி மெல்லப்[3]
பெயர்த்துவாய் புனல்வந் தூற விக்கலும் பிறந்த தாக
அயர்த்தில னிராம னமம்[4] வாழ்த்தினன் அமர ரார்த்தார்.

கொண்டுகூட்டு: முன் உயிர்ப்பு உதித்த(தாக,) பின்பு உரோமங்கள் சிலிர்ப்பன(வாக, இரண்டுக்கும்) இடையே வியர்ப்பு உளதாக, (மூன்ருவதாகக்) கண்கள் விழித்தன (ஆயின); வாய் புனல்வந்து ஊற, விக்கல்பிறந்ததாக, மேனி(யை) மெல்லப் பெயர்த்து இராமன் நாமம் அயர்த்திலன், வாழ்த்தினன். அதுகண்டு அமரர் ஆர்த்தார்.

பொருள்: (மூர்ச்சைதெளிந்த அனுமான்,) முதலில் மூச்சு உண்டானதாக, பின்பு மயிர்சிலிர்ப்பனவாக, (இரண்டுக்கும்) இடையே வேர்வை அரும்புவதாக, (மூன்ருவதாகக்) கண்கள் விழிப்பை அடைந்தன. (மூர்ச்சையில் வறண்டிருந்த) வாயில் நீர் ஊற, விக்கல் உண்டாக, உடம்பை மெல்ல (அசைத்து)ப் பெயர்த்துக்கொண்டு இராமனையும் அவன்பெயரையும் மறவாதவனுய் 'ராம ராம' என்று தோத்திரம்செய்தான். அதுகண்ட தேவர்கள் ஆரவாரித்தார்கள்.

உயிர்த்தல் - சுவாசித்தல். உரோமம் சிலிர்த்தல் - மயிர்க்கூச்செறிதல். ஊடு - (சுவாசித்தல் மயிர்சிலிர்த்தல் இரண்டுக்கும்) மத்தியில். புனல் - நீர். அயர்த்தல் - மறத்தல். வாழ்த்தல் - தோத்திரஞ்செய்தல் - துதித்தல். 'வாழ்த்தினன்' என்பதற்கு 'இராமன் வாழ்க' என்று கூறினனென்றும் பொருள்கொள்ளலாம்.

மூர்ச்சையுற்ருர் தெளிவுறும்போது அவரிடத்துக் காணப் படும் மெய்ப்பாடுகள், இப்பாட்டில், கூறப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

---

* அமளி - படுக்கை. † இப்படலம் 80-ஆம் பாட்டின் கடைசி அடி.

அனுமான், சதா இராமனைத் தியானித்துக்கொண்டிருப்பவன்; பிரமாத்திரத்தால் உணர்வுநீங்கும்போது இராமனையும் 'ராம' என்ற நாமமாகிய மந்திரத்தையும் நினைத்துக்கொண்டிருந்தான்; உணர்வு திரும்பவந்தபோது, அந்த நினைவும் திரும்பிவந்ததேயன்றிப் புதிதாக நினைந்தானல்லனென்பார், இராமன் நாமம் நினைந்தானென்னாது, இராமன் நாமம் அயர்த்திலன் என்றார்.

பாடபேதம்: [1] சிலிர்க்க ஊறி, சிலிர்ப்ப வாறி. [2] விழித்தனன், [3] என்ன. [4] இராமநாமம்.

அனும விபீடணர் சாம்பவானைக் கண்டு பேசுதல்

[அனுமான் மூர்ச்சைதெளிந்ததுகண்டு, விபீடணன், மகிழ்ச்சிகொண்டு, ஆநந்தக்கண்ணீர்சொரிந்து, அவனைப் பேரன்போடு தழுவினன். அனுமான், தன்னைத் தழுவினவனைத் தானும் எதிர் தழுவினன். பின்பு, 'இராமபிரானுக்குத் தீங்கில்லையே' என 'விபீடணன் சேமமாயிருக்கிறான்' என, இராமனிருந்த திக்கு நோக்கித் தெண்டனிட்டான். பின்பு சாம்புவான் எங்கிருக்கின்றான்? என்று வினவினன். விபீடணன், 'அவனை நான் எங்குங் கண்டதில்லை. உயிரோடிருக்கின்றானோ, இறந்தானோ என்பது தெரியவில்லை' என்று விடையளிக்க, அனுமான், 'அவனுக்குச் சாவில்லை. அவனைத் தேடிக் கண்டுபிடிப்போம். அவன், இறந்தாரெல்லாரையும் எழுப்பவல்லவன்' என்றான். விபீடணன் 'அப்படியானால், நாம் வாழ்ந்தோம். அவனைக் காண விரைந்துசெல்வோம்' என்றான். இருவரும் சாம்பவானைச் சீக்கிரமாகத் தேடிப்போய்ச் சேர்ந்தார்கள். முதிர்ந்த மூப்பினாலும் பிரமாத்திரம் தைத்த நோவினாலும் (அன்பர்களெல்லாம் அழிவுற்றார்களேயென்ற) துன்பத்தினாலும் வருந்தி, மூச்சடங்கி, ஒன்றும் உணராத மயக்கங்கொண்ட மனத்தினனாய்க் கிடந்த சாம்பவான், அனும விபீடணர் வருவதை(க் கண்கள் மூடியிருந்ததனால் காணவில்லையாயினும்) அவர்கள் அடிச்சுவட்டொலியை (மூடாதிருந்த) காதினாற் கேட்டறிந்தான். அவன் 'போர்வென்று போன பகைவர் வரக் காரணமில்லை. வந்தவர் தன் மீது இரக்கங்கொண்டு வந்தவராயிருக்கவேண்டும்' என்றெண்ணித் துன்பம்நீங்கி, அருவிவழியும் மலைகள்போலக் கண்ணீர்சொரியும் இருவரையும் தேறுதல்வார்த்தைகூறித் தேற்றி, (அவர்கள் இன்னார் இன்னாரெனப் பகுத்தறிதற்குக் கண்பார்வை பற்றாததனால்) 'நீவிர்

யாவிர்' என வினவ, அம்முதியோன் ஆவியோடு அறிவும் நீங்கா திருக்கின்றான் என்றறிந்து, மகிழ்ந்து, 'பிழைத்தோம் பிழைத் தோம்' என்று விபீடணன் விளம்பக்கேட்டு, 'விபீடணரே, உம் பக்கத்தில் நிற்பவர் யார்?' என, 'நீர் நீடுவாழ்க. அடியேன் அனுமான் நிற்கின்றேன், தொழுகின்றேன்' என்று அனுமான் கூற, '(நீ ஒருவன் இருத்தலால்) எல்லோரும் (உயிர்பெற்று) எழுந்திட்டோம் எழுந்திட்டோம்' என்று கூறி, மகிழ்ச்சிமிகுதியினால் ஊக்க முடையவனானான்.

பின்பு, சாம்பவான், 'திருமாலே இராமனாதலால், அவனைப் பிரமாத்திரம் யாதொரு தீங்கும் இழைக்காதென்பதை அறிவேன். அவன், அந்தப் பிரமாத்திரசம்பந்தமாக யாது செய்தான்?' என்று வினாவினான். அனுமான், 'அவன், உயிரொடுங்கிய தம்பியைக் கண்ட துன்பமிகுதியினால் தோன்றிய துயிலுக்குட்பட்டுள்ளான்' என்றான்.

சாம்பவான் அனுமானைச் சஞ்சீவிமருந்து கொண்டுவரும்படி கூறுதல்

சாம்பவான், 'இலக்குமணன் உயிரொடுங்கியிருக்கக்கண்டால், இராமன் தாங்கியிருக்கமாட்டுவானோ! இருவருக்கும் உடல் இரண்டேயன்றி உயிரொன்றே. அவர்களுக்கு ஒருமூலம் திரு மாலேயாதலால், உயிரும் ஒன்றேயாக உள்ளது. இதுநிற்க. இனி, இமைப்பளவும் தாமதியாமல், சஞ்சிவிமருந்தைக் கொணர்வாயாக. அதை நீ கொணர்ந்தால், எழுபதுவெள்ளம் வானரசைனிய முழு வதையும் இராமலக்குமணரிருவரையும் (இவர்கள் பிழைத்தாலன்றி இறந்துபடும்) மூன்றுலகத்தாரோடு தருமதேவதையையும் நான்குவேதங்களையும் சாவினின்று தப்பி வாழச்செய்தாயாவாய். அந்த மருந்தைக் கொணருதற்குச் சிறிதும் காலதாமதஞ்செய்யா மல் நான் சொல்லும்வழியே செல்லுவாயாக.

சாம்பவான் சஞ்சீவிமருந்து இருக்கும் இடமும் அதற்கு வழியும் தூரமும் தெரிவித்தல்

இந்தக் கடல்கடந்து ஒன்பதினாயிரம் யோசனை தூரம் சென்றால், இமயமலையைச்சேர்வாய்; அதனினின்று திரும்பவும் ஒன்பதி னாயிரம்யோசனை சென்றால், ஏமகூடபருவதத்தை எய்துவாய். இந்த

மலைக்கு ஒன்பதினாயிரம்யோசனைக்கப்பாலுள்ளது நிடதமலை; நிடத மலைக்கும் மேருமலைக்குமிடையே உள்ள தூரமும் ஒன்பதினாயிரம் யோசனையே. மேருமலையின் அகலம் முப்பத்தீராயிரம்யோசனை. மேருவைக்கடந்து மீண்டும் ஒன்பதினாயிரம்யோசனைசென்றால், நீலகிரியை அடைவாய். நீலகிரியினின்று நாலாயிரம்யோசனை; தூரத்திலுள்ளது, மருத்துமலை. அந்தக் *'கார்வரையைக் காணுதி; மற்றது காண இத்துயர்க்குக் கரையும் காண்டி' என்றான்.

மருந்துகளின் விவரணம்

பின்பு, அந்த மருந்துப்பூண்டுகளை விவரிப்பானாய், 'அந்த மலையிலுள்ள மருந்துமூலிகைகளுள் ஒன்று (சஞ்சீவகரணி) இறந்தவர்களைப் பிழைப்பிப்பது. மற்றொன்று (சந்தானகரணி) உடம்பு வெவ்வேறுகூறுகளாகப் பிரிக்கப்பட்டாலும் பொருந்தச்செய்வது. வேறொன்று (விசல்லியகரணி) உடம்புள்ளே புதைந்த படைக்கலங்களை வெளிப்படும்படிசெய்வது. பின்னுமொன்று (சாவருணியகரணி) அடையாளம் தெரியாதவண்ணம் உருவழிந்த உடம்பை அதன் இயற்கையுருவமடையசெய்வது' என்றுகூறி, அந்த மருந்துமூலிகைகளைக் தெரிந்துகொள்ளும்படி அவைகளின் விசேட அடையாளங்களை விளங்கச்சொன்னான் சாம்பவான். அவன், 'இந்த மருந்துகள், தேவாசுரர் திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்தில் தோன்றியவை. இவைகளைத் தேவர்கள் பத்திரமாக வைத்திருக்கின்றார்கள். வாமனனான திருமால் திரிவிக்கிரமனாய் மூவுலகை ஈரடியால் அளந்த வெற்றியை நான் பறையறைந்து பகிரங்கப்படுத்த உலகெங்கும் திரிந்தபோது, இந்த மருந்துமூலிகைகளைக் கண்டு, இவைகளின்குணங்களை முனிவர்கள் மொழியக் கேட்டுத் தெரியலானேன். இந்த மூலிகைகளை எண்ணிறந்த தெய்வங்கள் காத்துக்கொண்டிருக்கின்றன; அன்றிப் பெரிய சக்கராயுதமொன்று (சுற்றிச்சுழன்று) காத்துக்கொண்டிருக்கின்றது. பொய் இருக்குமிடத்துக்குப் பக்கத்திலேயும் நில்லாத (-சத்தியவிரதனான) நீ செய்யக்கருதியது சீரியகாரியமென்றுதெரிந்து, அந்தக் காவற்றெய்வங்களும் சக்கராயுதமும், (அந்த மருந்துகளைக்) கையகத்தனவாகக்

---

* இந்தப்படலம் ௨௬-ஆம் பாட்டின் கடைசி அடி. கார்வரை - கரிய மலை. காணுதி - காண்டி - காண்பாய். துயர்க்குக் கரையும் - (நம் நண்பர்களெல்லாரும் இறந்ததனால் உண்டாகிய) துன்பக்(கடலின்) கரையையும்.

கொண்ட உன்னைக் கோபியாதனவாய்த் தூரத்தேபோய் மறைந்து விடும்' என்றான்.*

அனுமான் மருந்துகொணரப் பெருவடிவங்கொளல்

'யான் இதசெய்வதே உன்னுடைய கட்டளையானால், (அந்தக் கட்டளையை எளிதாக நிறைவேற்றிவிடுவேன்). இறந்தாரெல்லாரும் திண்ணமாகப் பிழைத்தாராவார்கள். எம்பெருமானுக்கு யாதோரிடையூறும் நீங்கும் நேராமல் தெளிவுபிறக்கச்செய்யுங்கள்' என்றுகூறி, அனுமான் அவர்களைநீங்கித் தலையை வானம்தடுக்கத் தோள்கள் திசைகளைக் கடக்க ஆகாசத்தை(த் தன்னுள் அடங்க) விழுங்கினனென்னும்படி வளர்ந்தான் (ஆகித் தன் இயற்கைப் பேருருவங்கொண்டான்). அவனுக்குக் கிரகவரிசைகளும் நட்சத்திரவரிசைகளும் இரத்தினமாலைகளாயின. தோளுக்கும் தோளுக்கும் தூரம் ஆயிரம்யோசனையினும் அதிகமாயிருந்தது. பாதம் பெயர்க்க, இலங்கை இடம் போதாதாயிற்று. கைகளை வீசுதற்கு, திசைகள் காணாதனவாயிருந்தன. (மருந்துகொணர) விரைந்தெழுவானுடைய வடிவநிலை இப்படிப்பட்டதாயிருந்தது.

அனுமான் வேகமாகக் கிளம்பும் விவரணம்

அனுமான், வாலை வளைத்து, வாயை மடித்துக் கையை நிமிர்த்துக் காலைப் பதித்து, மார்பை விரித்துக் கழுத்தைச் சுருக்கி, மெய் மயிர் சிலிர்ப்ப, விரைவுகொண்டு, இலங்கை கருங்கடலுள் ஆழ்ந்து மரக்கலம்போல நடுக்கமுறக் கிளம்பினான்.

அவன்செல்லும் வேகத்தினால் விளைந்த நிகழ்ச்சிகள்

(வடக்குநோக்கிச்செல்லும்) அவன் வேகத்தினால், மேகங்கள் பிளந்தன; கடல்கள் கிழிந்தன; விண்மீன்கள் விழுந்தன; மலைகளும் மரங்களும் அழிந்தன. அவன் உடலிற் பிறந்த சண்டமாருதத்தால், வடக்கேயிருந்த மலைகள் சரிந்தன. கடல் பின்னேசெல்லக்

---

* 'பொய்ம்மருங்கில் நில்லாதாய் புரிகின்ற
காரியத்தின் பொருளை நோக்கிக்
கைம்மருங்குண் டாம்நின்னைக் காயாவாம்
அப்புறம்போய்க் காக்கும் என்றான்'

கைம்மருங்குண்டாம் என்ற அடி, திருநெல்வேலிக்கவிராயரவர்கள் வீட்டு ஏட்டுப்பிரதியிற் கண்டது.

காற்று முன்னேசெல்ல, உள்ளம் பின்னேசெல்லும்படியாக உடல் முன்னேசெல்ல (மனவேகத்தினும் மிகுந்த) வேகத்தோடு செல்வானை விண்ணவர்கள் கண்டு 'இராக்கதரைத் துன்பக்கடலுள் ஆழ்த்தி, எங்களை இன்பக்கரையிலேற்றினான்' என்றார்கள். மேகலோகம், சந்திரலோகம், சூரியலோகம், நட்சத்திரலோகம், சுவர்க்கலோகமென்ற போகலோகங்களெல்லாவற்றையும் கடந்து, பிரமலோகத்தைக் கிட்டியதென்னும்படியிருந்தது, அனுமானது உயரம்.

அவன் தேகத்தையும் வேகத்தையும் கண்டவர்கள் ஊகித்தல்

(உயர்ந்து அதிவேகமாகப்போகும் அனுமானைக் கண்ட) விண்ணுலகவாசிகளில் ஒருசிலர், 'கருடாழ்வான் வைகுந்தத்துக்கு விரைந்துசெல்கின்றா'னென்றார்கள்; வேறுசிலர், '(சத்தியலோகத்துள்ள) பிரமதேவன் வேறுலோகத்துக்குப்போகின்றா'னென்றார்கள். இன்னும் சிலர், 'ஈசனல்லாதார் யாரே, இவ்வளவு தூரத்துள்ளதென்று சொல்லமுடியாத மேலுலோகத்துக்குப் போகவல்லார்? இவன் அந்தத் திரிநேத்திரனான சிவனே'யென்றார். விண்ணுலகத்துக்கு மேல்மேலாகவுள்ள உலகங்களில் உள்ளவர்கள், 'வேதங்களுக்கெட்டாத திருமாலே தனக்கு இட்டமான இந்த உருவங்கொண்டு விளையாடுகின்றா'னென்றும், 'நன்றாகப் பார்ப்போம் என்று பார்ப்பவர் கண் இமைக்குமுன் கண்ணுக்கெட்டாததூரத்தே செல்கின்றா'னென்றும், 'தன்னை அடைந்தவர்கள் என்றும் நீங்காத சிறப்புடைய முத்தியுலகத்தை உற்றிடுவா'னென்றும் கூறினார்கள்.]

வேகமாகச்சேல்லும் அனுமானுடலின் தோற்ற வருணனை

147 உருவென்றார் சிலர்சிலர்க[1] ளொளியென்றார்[2]
சிலர்சிலர்க ளொளிரு மேனி[3]
அருவென்றார் சிலர்சிலர்க[4] ளண்டத்துக்
கப்புறநின்[5] றுலக மாக்குந்[6]
கருவென்றார் சிலர்சிலர்கள் காற்றென்றார்
சிலர்சிலர்கள்[7] கடலைத் தாவிச்
செருவென்று[8] நிலையொன்றுந்[9] தெரியகிலா[10]
நுலகனைத்துந் தெரியுந் செல்வர்.[11]

கொண்டுகூட்டு: உலகனைத்தும் தெரியும் செல்வர், கடலைத் தாவிச் செருவென்றான் நிலை ஒன்றும் தெரியகிலார், (அவர்களுள்ளே,) சிலர்சிலர்கள் 'உரு' என்றார்; சிலர்சிலர்கள் 'ஒளி' என்றார்; சிலர்சிலர்கள் 'காற்று' என்றார்; சிலர்சிலர்கள் 'அரு' என்றார்; சிலர்சிலர்கள் 'அண்டத்துக்கு அப்புறம்நின்று உலகம் ஆக்கும் கரு' என்றார்.

பொருள்: அனைத்துலகங்களையும் அறியும் (அறிவுச்) செல்வர்கள், கடலைத்தாண்டி (இலங்கையை அடைந்து அங்கே இராக்கதரோடுசெய்த) போர்களில் வெற்றிபெற்றவனான அனுமானுடைய (உடலின்) நிலைமையை அறியமாட்டாதார். (அவர்களுள்ளே) ஒருசிலர், (அதிவேகமாகச்செல்லும் அவனுடைய உடலைக் கண்ணுக்கும் மெய்க்கும் புலனாகும்) 'உருவப்பொரு'ளென்றார்கள்; வேறுசிலர், (மெய்க்குப்புலனாகாது, கண்ணுக்கு மட்டும் புலனாகும்) 'ஒளிப்பொரு'ளென்றார்கள்; மற்றும்சிலர், (கண்ணுக்குப் புலனாகாது, மெய்க்குப் புலனாகும் பரிசப்பொருள்களுள் ஒன்றான) 'காற்று' என்றார்கள்; பின்னுஞ் சிலர், (மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்பொறிகளுள் ஒன்றுக்கும் புலனாகாது மனத்துக்குப் புலனாகும்) 'அருவப்பொரு'ளென்றார்கள்; இன்னும் சிலர், அண்டங்களுக்குப் புறம்பாயிருந்து உலகங்களை உண்டாக்குகின்ற (ஐம்பொறிகளால்மட்டுமன்றி மனத்தாலும் அறியமுடியாத) மூலகாரணப்பொருளென்றார்கள்.

ஒளிரும் - பிரகாசிக்கும். அரு - உருவமில்லாதது. மேனி - உடல். ஆக்கும் - உண்டாக்கும் - படைக்கும். கரு - காரணப்பொருள். செரு - போர். தெரியகிலார் - தெரியமாட்டாதார்.

பாடபேதம்: [1] சிலர் சிலவர். [2] ஒளியென்ன. [3] ஒளிருமேனும். [4] சிலர்கள்சிலர், சிலர் சிலவர். [5] அண்டத்துக் கப்பானின்று, அண்டத்தும் புறத்தும் நின்று. [6] காக்கும். [7] மற்றென்றார், அன்றாயிற். [8] வென்றார். [9] ஒருவர். [10] தெரிக்கிலார், தெரிகிலர்கள். [11] தெரியுந் தேவர், சொல்வார் தேவர்.

வேகமாகச்சேல்லும் அனுமானுடலிற் பிறந்த ஓசைவருணனை

[பிரமலோகம்வரையும் நிமிர்ந்து ஆகாயமுழுவதையும் (வியாபித்து - இடமாகக்கொண்டு) மறைத்த, (வேகமாகச்செல்லுகின்ற) அனுமானுடைய பேருடலினின்றுபிறந்த உக்கிர ஓசையினால் திக்குப்பாலகர்கள் சிரம்நடுங்கினார்கள். அண்டகோளங்கள் அதிர்ச்சியுற்றன.

அனுமான் இமயத்தையும் கயிலேயையும் எய்துதல்

மிகக்குறிய வாமனன் மிக நெடிய திரிவிக்கிரமனுக, அவன் சிற்றடி இவன் பேரடியானவைகளால் உலகம் அளக்கப்பட்ட காலத்திற்போலச் சாதாரண வடிவமுடையவனுகவிருந்த அனுமான் அசாதாரண அபார ஆகிருதியுடையவனுக வளர்ந்து, சஞ்சீவி மருந்துகொணரச்சென்றகாலத்தில் உலகோரெல்லாரும் உவகை யுற்றனர். அவன், தேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் அவர்கள் தேவிமார்களெல்லாரும் மகிழ்ந்து தன்மேலே சொரிந்த மலர்கள் பொதிந்துவிளங்க, நிறையப்பூத்த கற்பகதருப் பறந்தாற்போலச் சென்றுன். அவன் இமயமலேயை அடைந்தபோது, அங்குள்ள தேவரும் முனிவரும் மற்றும் அறவழியொழுகும் அனேவரும் 'நீ எடுத்தகாரியம் இனிது முடிக' என்று வாழ்த்தினர். அப்பால் அவன் கயிலேமலேயைக் கண்டு கைகூப்பினுன். கயிலாசகிரிவாசனுன சிவபிரான், அவனேப் பார்வதிதேவிக்குச் சுட்டிக்காட்டி, 'அவன் வாயுகுமாரன்; இராமதூதன்' என, 'அவன் செல்லும் காரியம் யா தென அவள் வினவ, 'சஞ்சீவிமருந்து கொணரச் செல்லுகின்றுன். இராமன் பகைவரான இராக்கதர் அழிவது திண்ணம். (தேவர் முதலியோருடன்) நாமும் நாளேத்தினம் இராமராவணயுத்தத்தைக் காண்போம்' என்றுன்.

அனுமான் எமகூடத்தையும் நிடதத்தையும் தாண்டி மேருமீது செல்லுதல்

அனுமான் கயிலேமலேயினின்று ஒன்பதினுயிரம் யோசனே சென்று எமகூடமலேயின் உச்சியை அடைந்தபோது, முடிவில்லாத காமஇன்பத்தை அனுபவிக்கிற பாக்கியம் படைத்த தேவர்கூட்டத் தைக் கண்டு, அந்த மலேயினின்று ஒன்பதினுயிரம்யோசனேசென்று நிடதமலேயை அடைந்தான். அந்தமலேயினின்று மீண்டும் ஒன்பதி னுயிரம்யோசனே கடந்து மேருமலேயை அடைந்தான்.

[தொடரும்.]

ஸ்ரீ:

தா(யா)ராநகரவேந்தன் போஜதேவன் இயற்றிய

ஸரஸ்வதீகண்டாபரணம்

(கலைமகள்கழுத்தணி)

37-ஆம் தொகுதியின் ருஙஅ-ஆம் பக்கத் தொடர்ச்சி.

[ஸ்ரீ. V. S. ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள், B.A., B.L.]

12. அதிகோபமை.

ரூபேணாநேந ஶ்ருதிவிஶேஷஸ்ய யதிகோபமா ।
விஶேஷஸ்யைவ தேவாஸௌ நிர்தோஷா நாம கீர்த்யதே ॥ ௧௨௨ ॥

முன் நியூநோபமைக்குக் கூறியமுறைப்படியே அதிகோபமையும் குணமாகக்கொண்டு வழங்கப்படும். [குற்றமற்ற அதிகோபமையாவது:] கூறுதுவிடுத்த உவமேயவியல்பு ஆண்டு அநுமானவாயிலாக விளங்கித்தோன்ற நிற்பதாம். [அவ்வாறு விளங்கித் தோன்றுதெனில், ஆண்டு அதிகோபமை குற்றமெனப்படும்.]

உதாரணம்:—

ஸபீதவாஸா: ப்ரக்ருஹீதஶார்ங்க:
மநோஜ்ஞபீமம் வபுராப க்ருஷ்ண: ।
ஶதஹ்ரதேந்த்ராயுதவாந் நிஶாயாம்
ஸம்ஸ்ருஜ்யமாந: ஶஶிநேவ மேக: ॥

இரவில் மின்னலையும் வானவில்லையும் உடையதாய்த் திங்களுடன் சேர்ந்துவிளங்கும் மேகத்தைப்போலப் பீதாம்பரத்தையுடுத்தவரும் சார்ங்கமென்னும் வில்லையுடையவருமான கண்ணன், அழகியதும் அச்சம்விளைப்பதுமான வடிவைக் கொண்டார்.

இங்கே, உவமானத்திற் கூறப்பட்ட அடை மூன்று; அவற்றுள் மின்னலுடைமை வானவில்லுடைமை என்னும் இரண்டற்கும் நேராக உவமேயத்தும் பீதாம்பரமுடைமை சார்ங்கவில்லுடைமை என்னும் இரண்டியல்பு கிளக்கப்பட்டுள்ளன. மூன்ருவது உவமானதருமம் திங்களுடன் சேர்ந்திருத்தல். அதற்குநேராக உவமேயத்திற் சங்குடைமை கூறப்படவில்லை. ஆதலால் உவமேயதருமத்தினும் உவமானதருமம் மிக்கு அதிகோபமை என்னும் குற்றமாவான்செல்லுமெனினும், கூறப்படாத உவமேயதருமம் எளிதில் ஊகித்தறியத்தக்கதாயிருத்தலால் இது அக்குற்றமாகாது குணமாகவே கொள்ளப்படும்.

13. பக்நச்சந்தம்.

𑌯𑌤𑍍𑌰 𑌤𑍀𑌵𑍍𑌰𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌦𑍇𑌰𑌗𑍌𑌰𑌵𑌮𑍍 ।
𑌨 𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑍋𑌭𑌙𑍍𑌗𑌮𑌤𑍍𑌰𑌾𑌹𑍁𑌸𑍍𑌤𑌦𑌾 𑌦𑍋𑌷𑌾𑌯 𑌸𑍂𑌰𑌯𑌃 ॥ ௧௨௩ ॥

எவ்விடங்களில் ஸம்யோக (-மெய்க்கூட்டம்) எழுத்துக்களை விரைவில் உச்சரிப்பதால் அதற்கு முன்புள்ள எழுத்துக்கள் குருவென்று கொள்ளப்படாது இலகுவெழுத்தென்றே கொள்ள இடமுளதோ, அவ்விடங்களில் சந்தோபங்கம் என்னும் குற்றம் இன்று.

உதாரணம்:—

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[[illegible]
[illegible]
[illegible]
[illegible]]

கோதாவரியில் நீராடுதற்கு இறங்கியபோது உன் அரையிலுடுத்த ஆடை பாதியளவு நனைந்ததனாலேயே நீ அந்நதியில் நீராடியவளானய்.

இங்கே, இரண்டாவதும் பதினோராவதும் இருபத்துமூன்றாவதுமான எழுத்துக்கள் (— ஹ, ஸ்ர, ஸ, என்பன) தம்மளவில் இலகுவெழுத்துக்களேயாயினும், அவற்றின்முன்வரும் எழுத்துக்கள் ஸம்யோக எழுத்துக்களாய் (-மெய்ம்மயக்கமாய்) இருத்தலால், அவை இலகுவெனப்படாது குருவாம். ஆயினும், மேல்வரும் ஸம்யோகவெழுத்துக்களை விரைவாக உச்சரிப்பின் கீழ்நின்றவை குருவெழுத்தாகவேண்டும் யாப்புறவின்றி இலகுவெழுத்தாகவும் பெறும். ஆதலால் அவை குருவெழுத்தாங்கால் நேரும் பக்நச்சந்தம் (சந்தோபங்கம்) என்னும் குற்றம் இன்றாயிற்று.

14. யதிபங்கம்.

வாக்யவிஶ்ராமநவிரதி ஸ்தானயதிஸம்ஜ்ஞயா ।
ஸத்விஷ்டம் யத்யயா நாம ப்ரஷ்டம் தஸ்யோச்யதே ॥

உரிய இடங்களில் யதிவராததும் அல்லாத இடங்களில் யதிவருவதுமாய செய்யுளடி யதிபங்கம் என்னும் குற்றமுள்ளது எனப்பட்டது. ஆயினும், அது சிலவிடங்களில் அமைவதுமாம் என்று கூறப்படுகிறது.

உதாரணம்:—

ஶோபாம் புஷ்யத்யயமிஹ நவ: ஸுந்தரீணாம் ப்ரபோத:
கிம் ஜிஹ்மாவாருஸரஸோருஹே ப்ரேக்ஷிதம் காமினீனாம் ।
காயம் காயம் த்யஸவிகுநா ந்யாமஸெஸெநவ பஶ்யந்
பஶ்யாமி ஸ்வீயம் வஹதி ந்யவ இத்யுஷ்ஷி ஷாயம் ப்ரபோத: ॥

இங்கே நான்காமெழுத்தில் யதிவரற்பாலதாக, அங்ஙனம் வாராது ஐந்தாம் எழுத்தில் வருவதாயிருந்தமையால் யதிவழு எனத்தகுமெனினும், இஃது ஸந்தியால் சேர்ந்ததாதலின் அங்ஙனம் வழுவெனப்படாது அமைவுடையதேயாம்.

பெரியோர் கூறுவர்:—

ஸ்வரஸந்த்யக்ருதே ப்ராயோ யாத்ருச்சிகே யதிஷ்யதே ।
நாஸந்தௌ ஸைவ ஶேஷேஷு ந தோஷ இதி ஸம்ஶய: ॥

𑌆𑌦𑍍𑌯𑍇 𑌪𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌪𑌦𑌤𑍍𑌵𑌂 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌂 𑌯𑌥𑌾 ।
𑌤𑌥𑌾 𑌸𑌨𑍍𑌧𑌿𑌵𑌿𑌕𑌾𑌰𑌾𑌢𑍍𑌯𑌂 𑌪𑌦𑌮𑍇𑌵𑍇𑌤𑌿 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌤𑍇 ॥

உயிரெழுத்துப்புணர்ச்சியால்வந்ததன்றிப் பெரும்பாலும் வினைச்சொல்லைப் பகுப்பதன்கண்ணும் பெயர்ச்சொல்லைப் பகுப்பதன்கண்ணுமே யதிவழு என்னும் குற்றமாம். மற்றையிடங்களில் (-உயிரெழுத்துச் சந்தியால்வரும் பகுப்புமுதலியனவற்றில்) அஃது குற்றமாகாது என்று அறிஞர் கூறுவர். பதத்தின் இறுதி கெட்டவிடத்து எஞ்சியபகுதி எவ்வாறு பதமென்றே வழங்கப்பெறுமோ, அவ்வாறே சந்திவிகாரத்தோடுகூடியதும் பதமெனவே கொள்ளப்படும்.

15. அசரீரம்.

𑌅𑌶𑌰𑍀𑌰𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍀𑌨𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌨 𑌯𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌰𑌾𑌧𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 𑌵𑌾 𑌨𑌦𑍋𑌷𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌤𑌦𑍍𑌯𑌥𑌾 ॥ ௧௫ ॥

வினைமுற்றுச்சொல் இல்லாத வாக்கியம் அசரீரமென்னும் குற்றமுள்ளதென முன்பு கூறப்பட்டது. ஆயினும், வினைமுற்றுச் சொல்லை அவாவாது பொருள்முடியுமிடத்தும், உண்மைப் பொருள்தரும் வினைமுற்றுச்சொல்லைமட்டும் அவாவுமிடத்தும் அக்குற்றம் இன்றாம்.

உதாரணம்:—

𑌕𑌿𑌯𑌨𑍍𑌨𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑌲𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌜𑌾𑌨𑍁𑌦𑌘𑍍𑌨𑌂 𑌨𑌰𑌾𑌧𑌿𑌪 ।
𑌤𑌥𑌾𑌪𑍀𑌯 𑌮𑌵𑌸𑍍𑌥𑌾 𑌤𑍇 𑌨𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑌵𑌾𑌦𑍃𑌶𑌾𑌃 ॥

1. அந்தணரே! தண்ணீர் எவ்வளவு ஆழம்?
2. அரசே! முழங்காலளவுமட்டும்.
3. அப்படியிருந்துமா உமக்கு இவ்வளவு கஷ்டம்?
4. அரசே! எல்லோரும் உம்மைப்போன்றவராக உள்ளவரல்லரே.

இங்கே முதல் மூன்றுவாக்கியங்களும் வினைமுற்றுச்சொல்லை அவாவாது முடிவெய்தினின்றன. நான்காவது வாக்கியத்தில் 'உள்ளவர்' என்னும் சொல்மட்டும் எச்சமாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. அங்ஙனம் சேர்த்துக்கொள்ளப்பட்ட அச்சொல் உண்மைப் பொருளடியாகவந்த வினைச்சொல்லாதலால், அது கூருவிடினும் தானே வந்தியைவதாதலால் அதுவும் குற்றமன்று.

16. சிதிலம்.

𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌮𑌸𑍍𑌪𑍃𑌷𑍍𑌟𑌶𑍈𑌥𑌿𑌲𑍍𑌯𑌂 𑌶𑌿𑌥𑌿𑌲𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌃 ।
𑌗𑍌𑌡𑍈𑌰𑌪𑍀𑌷𑍍𑌯𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍁 𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌾𑌶𑌸𑍍𑌤𑍍𑌯𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑍍 ॥

நெகிழிசையின்றி வரத்தொடுப்பது சிலிஷ்டம் என்றும், நெகிழிசைவரத்தொடுப்பது சிதிலம் என்னும் குற்றமாம் என்றும் கூறப்பட்டன. ஆயினும், கௌடகவிஞர் அவ்வாறு நெகிழத்தொடுத்தலையும் சிறந்ததெனவேகொண்டு குணமென்பர்.

உதாரணம்:—

𑌲𑍀𑌲𑌾𑌵𑌿𑌲𑍋𑌲𑌲𑌲𑌨𑌾𑌲𑌲𑌿𑌤𑌾𑌲𑌕𑌲𑍋𑌲𑌲𑌾𑌸𑌾𑌃 ।
𑌵𑌿𑌲𑍁𑌪𑍍𑌤𑌮𑌾𑌲𑌤𑍀𑌮𑌾𑌲𑌾𑌜𑌾𑌲𑌕𑌾𑌲𑌾𑌨𑌿𑌲𑌾 𑌵𑌵𑍁𑌃 ॥

விளையாட்டில் ஈடுபட்ட மடந்தையர்களின் அழகுபொருந்திய கூந்தல்களை அசைத்துக்கொண்டும், மாலதிப் பூமாலைகளைச் சிதறச் செய்துகொண்டும் கார்காலத்துக்காற்று வீசியது.

இங்ஙனம் ஓரெழுத்தே வரத்தொடுத்தலால் நெகிழிசைவாய்ந்திருப்பினும், கௌடர் இந்நடை அழகுவாய்ந்ததெனக் கொள்வர். எனவே அவ்வொருசாரார் கொள்கையின்படி இது குணமேயாம்.

17. வைஷம்யம்.

𑌨 𑌦𑍋𑌷𑌃 𑌕𑍍𑌵𑌾𑌪𑌿 𑌵𑍈𑌷𑌮𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌤𑍍𑌯𑌯𑌾𑌲𑌂𑌕𑌾𑌰𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍 ।
𑌗𑍌𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍍𑌯 𑌨𑌾𑌸𑍍𑌤𑍍𑌯𑌤𑌸𑍍𑌤𑌾𑌚𑍍𑌚 𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌬𑌨𑍍𑌧𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑌾 ॥

சொற்றொடர்கள் ஒரு நெறியினவன்றி மாறுபட்டுவருமாயின் அது வைஷம்யம் என்னும் குற்றமாமென்று முன் கூறப்பட்டது. எனினும், அது, பொருளணி சொல்லணி நிமித்தமாக வரினும், கௌடகவிஞர் ஆதரித்தவையாயிருப்பினும் குற்றமாகாது குணமாம்.

உதாரணம்:—

𑌚𑌨𑍍𑌦𑌨𑌪𑍍𑌰𑌣𑌯𑍋𑌦𑍍𑌗𑌨𑍍𑌧𑌿𑌰𑍍𑌮𑌨𑍍𑌦𑍋 𑌮𑌲𑌯𑌮𑌾𑌰𑍁𑌤𑌃 ।
𑌸𑍍𑌪𑌰𑍍𑌧𑌤𑍇 𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑌦𑍍𑌧𑍈𑌰𑍍𑌯𑍋 𑌵𑌰𑌾𑌰𑌾𑌮𑌾𑌮𑍁𑌖𑌾𑌨𑌿𑌲𑍈𑌃 ॥

சந்தனமரங்களின்சேர்க்கையால் நறுமணம்பொருந்தியதும் மென்மையாயதுமான தென்றல் என் ஊக்கத்தை அழித்துச் சிறந்த பெண்களின் மூச்சுக்காற்றுடன் போட்டியிடுகின்றது.

இங்கே, சொற்றொடர்கள் ஒருநெறிப்பாடின்றி, மென்னடை தழுவியவும், வன்னடை தழுவியவும், இடைப்பட்டனவுமாய் மாறுபட்டுளவாயினும், அணிகுறித்துவருதலானும் கௌடகவிஞரால் கொள்ளப்பட்டுவந்தமையானும் குணமாயின.

[தொடரும்]

மலையும் கடலும்

[பிரபுத்தபாரத ஆசிரியர் ஸ்ரீ. சுவாமிவிபுலாநந்தரவர்கள்.]

'நடுக்கின்றி நிலீயரோ வத்தை யடுக்கத்துச்
சிறுதலை நவ்விப் பெருங்கண் மாப்பிணை
அந்தி யந்தணர் அருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே'

(புறநானூறு–உ.)

'இமயமலையும் பொதியின்மலையும் போன்று ஒழியாது நெடுங் காலம் விளங்கித் துளக்கமின்றிநிற்பாயாக' என முரஞ்சியூர் முடி நாகராயர் சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனை வாழ்த்தி னார். மலைக்கும் அரசற்கும் பொதுத்தன்மை அசைவின்றி நீடு வாழ்தல்.

'பொதியி லாயினு மிமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய வென்ப தல்லதை
யொடுக்கங் கூறார் உயர்ந்தோ ருண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே'

(சிலப்பதிகாரம்–க.)

என இளங்கோவடிகள் பொதியில், இமயம், புகார் என்ற மூன்றினை யும் ஒருவாற்றான் ஒப்புரைத்தார். ஆதியில் தோன்றுதலும் சலிப் பின்றி நிலைபெறுதலும் பொதுத்தன்மைகள்.

'அன்றியிரு பூதலமு மிருதட் டாக
அகத்தியன்வாழ் குன்றினையும் அணிமுக் கோணக்
குன்றினையும் சீர்தூக்கி நிறுப்ப தாகக்
கோகனத னமைத்ததுலைக் கோலும் போலும்'

(வில்லிபாரதம்-அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்.)

என வில்லிபுத்தூராழ்வார் கூறுதலின், தமிழ்முனிவன்குன்றும், ஈழநாட்டுத் திரிகோணக்குன்றும் ஒப்புநோக்குதற்குரியவாயின.

கோணமலை தேவாரம்பெற்ற தலமாதலின், 'திரு' என்னும் அடையடுத்துத் திருக்கோணமலை என வழங்கவும் பெறும். அலை கடல் நடுவண் நிலைபெறநிற்றல் திருக்கோணமலைக்குச் சிறப்பியல்பு.

'கரைகெழு சந்துங் காரகிற் பிளவும் அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங் கோணமாமலை'

'கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமாமலை'

'தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை'

'கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை'

'விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமாமலை'

'குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங் கோணமாமலை'

என்றெல்லாம் திருஞானசம்பந்தசுவாமிகள் அகத்தியன்வாழ்குன்றினுக்கு ஒப்பான அணிமுக்கோணக்குன்றினைச் சீர்பெறவுரைக்கின்றார்.

'மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்'

என வகுத்த நானிலத்தினும் இரண்டு ஒருங்கியைந்துநிற்றலின், இரண்டினுக்குமுரிய அழகினையும் தாங்கி 'ஒண்கானல் வாசம்வந் துலவும்' மலையாயிற்றுத் திருக்கோணமாமலை.

மலைவருணனை கூறுநீர்மையிற் சம்பந்தசுவாமிகளது தேவாரத்திற்கு ஒரு தனிச்சிறப்புண்டு. முதுகுன்றம், செங்குன்றம், முழுநீலக்குன்றம் (இந்திரநீலப்பருப்பதம்), முருகனுறை பரங்குன்றம், கொடுங்குன்றம், குறும்பலா, காளத்தி, கேதாரம், கைலை, கோகரணம், குற்றாலம், இடைச்சுரம், கற்குடி, ஈங்கோய்மலை, திருப்பருப்பதம் எனும் மலைகள் தமக்குரிய இயற்கை வனப்போடு தேவாரச்செழும்பாடலளிக்கும் தெய்வவனப்பும் பொருந்தியன.

'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு' (சிலப். எ.)

என்றமையின் மலையும் கடலும் தமிழ்நாட்டிற்கு வரம்பாயின.

'நீலத் திரைக்கட லோரத்தி லேநின்று
நித்தந் தவஞ்செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடை யேபுகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு'

எனச் சுப்பிரமணியபாரதியார் இவ்வுண்மையினை அழகுறக் கூறுகின்றார்.

'வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்'

என அக்கவிஞர் நம் நாடு வருங்காலத்தில் அடையப்போகின்ற உயர்நிலையை யெடுத்துகூறுமிடத்துப் பனிமலையையும் அலைகடலையும் குறிப்பிடுகின்றார்.

வேள்பாரி ஆண்ட பறம்புமலையும், குமணவள்ளலுக்குரிய முதிரமலையும், வல்விலோரியினது கொல்லிமலையும், எழினி அதியமான் ஆண்ட குதிரைமலையும், கண்டீரக்கோப்பெருநற்கிள்ளியினது தோட்டிமலையும், மலையமான் திருமுடிக்காரிக்குரிய முள்ளூர்மலையும், நாஞ்சில்வள்ளுவனாண்ட நாஞ்சில்மலையும், நன்னனது நவிரமலையும் தம்மையுடையோரது கொடைவென்றியினாலே புலவர் பாடும் புகழுடையவாயின.

'புலவரை யறியாப் புகழொடு பொலிந்து
நிலவரைத் தாங்கிய நிலைமையிற் பெயராத்
தொலையா நேமிமுதல் தொல்லிசை யமையும்
புலவராய் புரைத்த புனைநெடுங் குன்றம்
பலவெனின் ஆங்கவை பலவே பலவினும்
நிலவரை ஆற்றி நிறைபயன் ஒருங்குடன்
நின்றுபெற நிகழுங் குன்றவை சிலவே
சிலவினுஞ் சிறந்தன தெய்வம் பெட்புறு
மலரகன் மார்பின் மைபடி குடுமிய
குலவரை சிலவே குலவரை சிலவினும்
சிறந்தது,
கல்லறை கடலும் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும்
எல்லாம்,
வேறுவேறு உருவின் ஒருதொழி லிருவர்த்
தாங்கு நீணிலை ஓங்கிருங் குன்றம்' (பரிபாடல்–15.)

என இளம்பெருவழுதியாராலே திருமாலிருஞ்சோலைமலையினதுசிறப்புக் கூறப்பட்டது.

பயன்தருதலும் தெய்வத்திற்கு இருப்பிடமாதலும் மலைக்குரிய சிறப்பாகக் கூறப்பட்டன. உழவருழாத பயனுடைமை, வறப்பினும் வளந்தரும் வண்மை, பகைவரால் தாக்குதற்கரிய காவலுடைமை என நின்ற இயல்புகளைநோக்கி மன்னர் மலையினை இருக்கையாக்கினரென்னலாம். அளத்தற்கருமை, அசைவின்மை, மாவும் மானும் பூவும் புள்ளுமென்றின்னவற்றின் இயற்கைவனப்பு, அரிதுமுயன்றாரானன்றிப் பிறரால் அணுகுதற்கருமை, நீரருவியுடைமை என்னும் இவ்வியல்புகளினாலே மலைகள் தெய்வக்கோயில்களாகத் திகழ்ந்தன. மேலையவற்றோடு உழவருழாது விளையும் உணவுடைமையும்பற்றி முனிவர் மலைக்குகைகளை இருப்பிடமாக்கினர்.

மலையை வருணித்துக்கூறும் அழகிய செய்யுட்கள் தமிழ்மொழியில் நிரம்பவுள்ளன. ஆன்றோர் வகுத்த பத்துப்பாட்டிலே திருமுருகாற்றுப்படையும், குறிஞ்சிப்பாட்டும், மலைபடுகடாமும்,

தொகைநூல்களிலே குறிஞ்சித்திணைப்பாலவாய பன்னூறசெய்யுட்களும் சீவகசிந்தாமணியிலே பதுமையாரிலம்பகம், விமலையாரிலம்பகம், மண்மகளிலம்பகம், என்றின்னவும், சிலப்பதிகாரத்திலே குன்றக் குரவை, காட்சிக்காதை என்றின்னவும், பெருங்கதையிலே உஞ்சைக் காண்டத்துக் குறிஞ்சிநிலங்கடந்தது என்னும் பகுதியும், திருத்தொண்டர்புராணத்துத் திருமலைச்சிறப்பு, கண்ணப்பநாயனார்புராணம் என்றின்னவும், நாலாயிரதிவ்யப்பிரபந்தத்துள் திருவேங்கடம், சிங்கவேள்குன்றம், வதரியாச்சிரமம், திருப்பிருதி என்றித்தொடக்கத்த தலங்களைக்கூறும் பாடல்களும், சூளாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம், கந்தபுராணம் எனநின்ற காப்பியங்களிற் சிலபகுதிகளும், திருக்கைலாயஞானவுலா போன்வண்ணத்தந்தாதி, கயிலைபாதி காளத்தி பாதியந்தாதி, திருவீங்கோய்மலையெழுபது, திருக்கண்ணப்பதேவர்திருமறம் என்றின்னவும் பிறவும் மலைவருணனை தந்துநின்றனவென்றால், மலைக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பினை விரித்துக்கூறவும் வேண்டுமா? யாம் அறிந்த பிறமொழிகளிலே மலைவருணனைகூறுஞ் செய்யுட்கள் இவ்வளவு அதிகமில்லை.

ஆங்கிலமொழியிலே கடலைவருணித்துக்கூறுஞ் செய்யுட்கள் அதிகமாக உள்ளன. நமதுமொழியிலுள்ள நெய்தற்றிணைச்செய்யுட்கள் கடல்மீதுசெல்லாது கடலையடுத்த நிலத்தின்மீதுசெல்வன. நெய்தற்கருப்பொருளாகிய இரங்கலினைக் குறித்தனவாதலின், இச்செய்யுட்கள் அவலச்சுவை பயப்பனவாய்க் கழிக்கானலிலுள்ள புள்ளினையும் பூவினையும் முன்னிலைப்படுத்தினவாய், எற்பாட்டு வருணனையோடு கூடிவருவன.

'புன்கண்கூர் மாலைப் புலம்புமென் கண்ணேபோற்
றுன்ப முழவாய் துயிலப் பெறுதியால்
இன்கள்வாய் நெய்தால்நீ யெய்துங் கனவினுள்
வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ'

(சிலப்பதிகாரம்—எ)

என்பது போல்வன.

தமிழ்நாட்டினர் கலத்திற்சென்று பிறநாடுகளைத் தம்வயப் படுத்தி வெற்றிக்கொடிநாட்டினரெனத் தேசசரித்திரம் கூறுகின் றது. தமிழ்வணிகர் பண்டமாற்றுநோக்கமாகக் கலமேறிப் பிறநாடு களுக்குச் சென்றதுண்டு. அங்ஙனமாயினும், அந்நிகழ்ச்சிகளைக் கூறுஞ்செய்யுட்கள் தமிழ்மொழியில் அதிகம் இல்லை. சீவகசிந்தா மணியிலும், மணிமேகலையிலும் காணப்படும் வரலாறுகள் வணிகர் கலத்திற்சென்ற நிகழ்ச்சிகளை ஓரளவாகக் கூறுகின்றன.

'திரைகட லோடியும் திரவியந்தேடு' என்றமையின், பொரு ளீட்டுதல் கருதிய ஸ்ரீதத்தன் என்னும் வணிகன், நன்னாளிலே வறியோர்க்கு வேண்டுவன நல்கிக் கோடும் பறையும் முழங்கக் கலத்திலேறுகின்றான். கொடியணிந்த கூம்பிலே கட்டிய மூன்று பாய்கள் காற்றினைமுகக்கக் கப்பல் நன்றாக ஓடி அழகியதீவொன் றினைச்சேருகிறது. அத்தீவில் இறங்கிய வணிகன் அரசனுக்கு முத் தாரங்கொடுத்து, அவனது தலையளியைப்பெற்று, மகளிரது ஆடல் பாடலினைக் கண்டும் கேட்டும் அகமகிழ்வுற்றுச் சின்னாள் தங்கிப், பண்டங்களை விற்று விலையாகப்பெற்ற நிதிக்குப்பையைக் கப்பலி லேற்றி, அரசனிடம் விடைபெற்று, இரேவதி வியாழவோரையி லே ஊர்க்குத் திரும்பப் புறப்படுகின்றான். பெருங்காற்று வீசுதலி னாலே கப்பல் கூம்பு ஒடிந்து நீரினுள் அமிழ்கின்றது. வணிகன் இற்ற கூம்பினது துண்டினைத் தழுவி, நடுயாமத்திலே, கடலலை யினை நீந்திக் கரைசேருகின்றான். தரன் என்பான் தோன்றி வணிகனைக் கலுழவேகனிடம் இட்டுச்செல்லுகிறான். இவ்வரலாற் றினைத் திருத்தக்கதேவர் சுவைநிறைந்த கவியாக அமைத்துத் தமிழர்க்கு நல்கினார்.

இக்காலத்திலே நிக்கபார் (Nicobar) என வழங்கும் நக்கவாரத் திலே கலங்கவிழ்ந்து கரைசேர்ந்த சாதுவன் என்னும் வணிகனது செய்தி மணிமேகலையினுட் கூறப்பட்டது.

தேவையர்கோனாகிய காங்கேயன் இயற்றிய கண்ணகியார் வழக்குரை என்னும் சிறுகாப்பியத்திலே கண்ணகியாரது காற் சிலம்புக்கு நாகமணி கொணரும்பொருட்டு மீகாமன் கப்பலேறிச்

சென்ற செய்தியும், வெடியரசனோடு கடற்போர்செய்த செய்தியும் கூறப்பட்டன.

எந்திரக்கப்பல்கள் எழுகடலையும் தாண்டி உலகினை வலம்வருதலும், ஒருநாட்டிலே விளையும்பொருள், பலகாவதங்களுக்கப்பாலுள்ள பலப்பலநாடுகளுக்குச் செல்வதற்குக் கடலே பாதையாக அமைந்திருத்தலும், நிலத்திலுள்ள வசதிகளிலும்பார்க்கப் பன்மடங்கு அதிகமான வசதிகளோடு கலத்திற் செல்லுதலும், பீரங்கியேந்திய மிதக்குங்கோட்டைகளைப்போன்ற போர்க்கப்பல்கள் கடற்போர்புரிதலும் பிறவும் இக்காலத்து நிகழ்ச்சிகள்.

மேற்றிசைநாடுகளிலே, புதுமணத்த மென்மகளிரும் புருடரும் வரைவுக்காலத்தையடுத்துவருவதாகிய இன்பநுகர்ச்சிக்குரிய தலைத்திங்களிலே கடற்பிரயாணஞ்செய்வதுண்டு. இன்பநுகர்ச்சித் தலைத்திங்களினை அந்நாட்டார் 'தேன்மதி' (Honeymoon) என்பர். பசிபிக்சமுத்திரத்திலே, தெங்கம்படப்பையோடுகூடிய பவளத் தீவுகள் அளவிற்சிறியவாயினும் பேரழகுவாய்ந்தன. இவற்றைக் குறித்து ஆங்கிலமொழியிலே கற்பனைக்கதைகளும் உண்மைக்கதைகளும் எத்தனையோ பல உள.

பைரன் (Byron) என்னும் ஆங்கிலமகாகவி கடலைப் பொருளாகக்கொண்டுபாடிய பாடல்கள் வனப்புவாய்ந்தன. வங்கமொழியிலே கடலைச் சிறப்பித்துப்பாடியவர் சிறந்த தேசாபிமானியாகிய சித்தரஞ்சனதாசர்.

மலையிற்பிறந்த ஆறு கடலிற் கலத்தலின் ஆற்றுவளம் கூறப்புகுந்த புலவர் மலையையும் கடலையும் பாடுதல் இயல்பு. எல்லையில்லாத பரம்பொருளுக்கு மலையும் கடலும் உவமப்பொருளாயின.

ஓர்க்கோலை, சங்கு, பவளம், முத்து, உப்பு என்னும் ஐந்தினையும் கடல்வளனென்ப.

'தக்கோலந் தீம்பூத் தகைசா லிலவங்கம்
கப்பூரஞ் சாதியோ டைந்து'

என மலைவளன் கூறப்பட்டது.

'மலைப்பஃ றாரமுங் கடற்பஃ றாரமும்
வளந்தலை மயங்கிய துளங்குகல விருக்கை'

(சிலப்பதிகாரம்–சு)

என்னுஞ் செய்யுளடிகளிலே காவிரிப்பூம்பட்டினத்துக் கடற்றுறை முகத்திலே அசைகின்ற மரக்கலங்களும் குவிந்துகிடக்கின்ற பண்டங்களின் மலிவும் கூறப்பட்டன.

'கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூல மறுகிற் கொடியெடுத்து நுவலும்
மாலைச் சேரி' (சிலப்பதிகாரம் சு.)

என்னும் அடிகளுள் பரதேசிகள் கலத்திலே பல்வகைச்சரக்குகளைக் கொண்டுவருதலும், தம்மிடத்து இன்னசரக்கு உள என்பதைக் கொடிகளாற் சொல்லுதலும் கூறப்பட்டன.

'கலஞ்சமைத் தற்கு வேண்டுங் கம்மிய ருடனே செல்லும்
புலங்களில் விரும்பு பண்டம் பொருந்துவ நிரம்ப ஏற்றிச்
சலந்தரு கடவுட் போற்றித் தலைமையாம் நாய்கன் றானும்
நலந்தரு நாளில் ஏறி நளிதிரைக் கடல்மேற் போனான்'

(காரைக்காலம்மையார்புராணம் கூகூ.)

என்னுஞ் சேக்கிழார்பாடலினாலே கடற்பிரயாணஞ்செய்வோர் வருணனைப்போற்றுதல் கூறப்பட்டது. மேனாட்டுப்புராணங்களிலே கடற்றெய்வத்திற்கு நெப்தியூன் (Neptune) என்பது பெயர். இவர் கைப் படைக்கலம் மூவிலைச்சூலம். கடல்மீது ஆணைசெலுத்தும் பிரித்தானியாநாட்டினை உருவகித்த பிரித்தானியா என்னும் பெண் தெய்வத்தின்கையிலும் மூவிலைச்சூலம் உளது. முருகவேள்வழி பாடு சிறந்துவிளங்குந் தமிழ்நாட்டுப்புலவர் மலையைச்சிறப்பித்துப் பாடியதும், வருணன்வழிபாடு வழக்குவீழ்ந்தமையின் கடலினைப் பாடாதொழிந்ததும் இயல்பேயாம்.

கவியும் சால்பும்

[பிரபுத்தபாரத ஆசிரியர் ஸ்ரீ. சுவாமி விபுலாநந்தாவர்கள்.]

'திருமலி யழகுடைச் செழும்பொருள் தானே
உவகை நீர்மையது; ஆங்கவ் வுவகை
பன்னாட் கழியினும் கழியா வியல்பிற்
றண்டா வின்பந் தந்துநிற் பதுவே'

என ஆங்கிலமொழிப் பெரும்புலவராகிய கீற்சு (Keats) என்பவர் தாம் இயற்றிய எந்திமியோன் (Endymion) என்னும் பெருங்காப்பியத்திற்குத் தோற்றுவாய்கூறினர். 'அழகுடைப்பொருள் என்றும்உவகைதருவது; அழியாவின்பத்தின் நீர்மையது; ஆதலின், அதுவே புலவராற் பாடுதற்கமைந்தது' என்பது கீற்சு நிறுவிய முடிபு. இப்புலவர் தாமே மற்றொருசெய்யுளகத்து,

'அழகே உண்மை, உண்மை அழகென
உலகினில் அறிந்தோர் அறிவுபிற வேண்டார்'

எனக் கூறினர். ஈண்டு அழகிற்கு உண்மை ஒப்புடைப்பொருளாகக் கூறப்பட்டது.

அறிவு, இச்சை, செயல் (ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி) எனும் மனநீர்மை மூன்றனுள் அறிவு உண்மைப்பாலது; இச்சை அழகின்பாலது; செயல் செம்மைப்பாலது. உண்மை, அழகு, செம்மை என்பன முறையே அறிவு, இச்சை, செயலுக்கு எல்லையாகவும் நிலைக்களமாகவும் அமைந்தன.

மனநீர்மை மூன்றாயினும் மனம் ஒன்றே. ஆதலினாலே உண்மை, அழகு, செம்மையென்பன தம்முள்ளே ஒப்புடையவாயின. அழகே உண்மை, உண்மையே அழகு; அழகே செம்மை, செம்மையே அழகு; உண்மையே செம்மை, செம்மையே உண்மை.

செம்மை, உண்மை, அழகென்னும் இவற்றை வடநூலார் சிவம், சத்தியம், சுந்தரம் என்பர்; ஆங்கிலநூலார் Goodness, Truth, Beauty என்பர்.

'நெஞ்சத்து நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையாற் கல்வி யழகே யழகு' என்புழி 'நெஞ்சத்து நல்லம்' எனச் செம்மையும், 'கல்வியழகு' என அறிவும், அழகின் வேறின்மையாதல் கூறப் பட்டது. 'உருவின்மிக்கதோர் உடம்பி'னைப் பெற்றோரும் கல்வியறி வில்லாதவழி அறிவுடையோரால் அழகிலரெனக் கருதப்படுவ ராதலின், 'கல்வியழகே யழகு' என்னுமிடத்து வந்த ஏகாரம் பிரிநிலையும் தேற்றமுமாயிற்று.

அழகும் உண்மையும் கவிப்பொருளாயினவாறுபோலச் செம்மைவயத்ததாகிய சால்பும் கவிப்பொருளாயிற்று. காப்பியத் தலைவனிடம் காணப்படும் சால்பே காப்பியக்கவிகள் விரித்துக் கூறும் பெரும்பொருள்.

வாழ்க்கையிலே சால்புவாய்ந்தோனாகிய கவிஞனொருவன் சால் பினைக் கவிப்பொருளாகக்கொண்டு செய்யுள்செய்வானாயின், அச் செய்யுள் இனிமையும் மாண்பும் உறுதியுந்தந்து மிளிருமென்பது அறிஞராயினருக்கு உடம்பாடேயாம்.

வெள்ளகால் சுப்பிரமணியமுதலியார் என்னும் தமிழ்ப்பெருங் கவியினது தனிப்பாடல்களின் தொகுதியும், அப்பெரியாரது எண்பதாம் ஆண்டுநிறைவுவிழாவிலே, மதுரைத்தமிழ்ச்சங்கத் தாரையுள்ளிட்ட தமிழறிஞர் கூறிய வாழ்த்துரை, வாழ்த்துச் செய்யுட்களின் தொகுதியும் கையகத்துள்ளன.

'புதுவதுகிளந்த யாப்பின்மேற்'றாகிய கவிதை பெருவாவிற் றாகிய இக்காலத்திலே, தொன்மைநலஞ் சிறிதுங் குன்றாத செய்யுள் செய்யும் புலவர் மிகச் சிலரேயாவர். அப்புலவர்வரிசையிலே முதற் கண்வைத்து எண்ணுதற்குரிய வெள்ளகால்கிழார் இயற்றிய தனிச்

செய்யுளகத்துக் காணப்படும் கவியழகுகள் பல நுறைய. அவை அனைத்தினையும் ஆராய்ந்துகூறப்புகின் உரை பெருகுமாதலின், மக்களைத் தேவராக்கும் நீர்மையதாகிய 'சால்பு' என்னும் பெரும் பொருளினைக் குறித்து, வாழ்க்கையிலே சால்புவாய்ந்த இப்பெருங் கவி கூறிய பலகவிதைகளிலே ஒரு சிலவற்றை யாராய்ந்து அவை தம்முட் பொதிந்த அழகினை எடுத்துக்காட்டுதலே 'கவியும் சால்பும்' என்னும் இப்பொருளுரையின் நோக்கமாகும்.

'அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ, டைந்து சால் பூன்றிய தூண்,' என ஆசிரியர் திருவள்ளுவனார் சால்பிற்கு நிலைபேறுவன இவ்வையெனக் கூறுமுகத்தாற் சால்பினது வரைவிலக் கணங் கூறினர். சுற்றத்தார்மேலேயன்றிப் பிறர்மேலு முளதாய அன்பும், பழிபாவங்களினுணலும், யாவர்மாட்டும் ஒப்புரவுசெய்த லும், பழையார்மேற் கண்ணோடலும், எவ்விடத்தும் மெய்ம்மை கூறலுமே சால்பிற்கு நிலைபேறுவன.

'என்றும், நல்லோ ரிணக்கமே நான்இணங் கிடுக
நல்லோர் நினைவே நான்நினைக் கிடுக;
நல்லோர் உரையே நான்உரைத் திடுக;
நல்லோர் நடையே நான்நடக் கிடுக;
....
உயிர்களை வருத்தல் ஒழிவே னுக;
உயிர்போ மெனினுமெய் உரைப்பே னுக;
கள்வினைக் கனவினுங் கருதே னுக;
....
அயலவர் பொருளினை அவாவே னுக;
அவர்கள்தம் வாழ்வுகண் டழுக்கறே னுக;
அவர்செயும் நன்றியை அயர்த்திடே னுக;
முன்புபின் பவர்பழி மொழியே னுக;
எங்கணும் அவர்புகழ் இயம்புவே னுக;
அவர்குறை கண்டவிற் குருடனே னுக;
அவர்மறை கேட்டவிற் செவிடனே னுக;

அவர்க்கின்னு கூறலில் ஊமனே னுக;
அவர்க்கூறு செய்தலில் முடவனே னுக;
அவர்கேடு சூழ்தலில் அறிவிலே னுக;
எனைக்கெடுத் தவர்க்கும்நன் றியற்றுவே னுக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னுக;
வெறுத்தவ ரெவரையும் விரும்புவே னுக;
ஒறுத்தவ ருக்கும் உதவுவே னுக;
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே னுக;
இத்தனை நல்லொழுக் கியைந்துளே மென்று
பெருமைபா ராட்டிடும் பிழையிலே னுக;
....
என்னை எவரும் இகழினும் புகழினும்
செல்வம் என்னைச் சேரினும் தீரினும்
இன்றே இறக்கினும் என்றும் இருக்கினும்
எவ்வெவ் வின்பையும் எய்துதற் கெனினும்
எவ்வெத் துன்பையும் இரித்தற் கெனினும்
உண்மை வழுவி ஒழுகே னுக;
....
எச்செய லெனினும்யான் இயற்றிட நேருமேல்
என்மனம் அமைதியை இழந்திடா தாக;
வருத்தம்என் மனத்தினை வருத்திடா தாக;
கடல்மலை வனம்இடு காடுகள் முதலா
வெருவிடு தனியிடம் மேவினே னுயினும்
பாய்புலி பிடிக்கினும் பாம்பு கடிக்கினும்
என்மனம் நடுக்கினை எய்திடா தாக;
அலையா உறுதியுற் றசைக்க வொண்ணேனுய்
வச்சிர வெற்பென வற்பினை உற்று
விருப்புறு பொருள்கள் விட்டு விலகினும்
வெறுப்புறு பொருள்கள் மேவிச் சேரினும்
ஒழுக்கம் வழுக்கா உளத்தே னுக;'

எனக் கவி ஆண்டவனை வேண்டுமுகத்தால் மேலும் மேலும் பெறுதற்குத் தாம் அவாவிய சால்பு எனும் அழியாச்செல்வத்தின் நல்லியல்புகளை வகுத்துரைக்கின்றார்.

யாம் முன்னர்க் காட்டிய ஐந்தினோடு 'அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கும் இழுக்காவியன்ற அற'மும், 'அஞ்சாமை யீகை அறிவு ஊக்கம்' எனும் நான்கும், குடிமையும், மானமும், பெருமையும், பண்புடைமையும் இதனுட் கூறப்படுதல் காண்க.

'நல்லொழுக் கத்துடன் வாழ்தலே நீடித்த
நல்வாழ்க்கை யாகும் நடைபிறழ்ந்த
புல்லொழுக் கம்முடை யோர்நீடு வாழ்ந்தாலும்
பொன்றின வர்களே யென்றறிவீர்' எனவும்,

'உண்மைக்கு மேலாம் மதமில்லை; எல்லா
உயிர்க்கன்பின் மிக்கதோர் பத்தியில்லை;
வண்மைக்கு மேலுப காரமில்லை; நல்
வசனத்தின் மேலுப சாரமில்லை' எனவும்,

'ஒக்க ஊக்கமோ டுறுதிநம் உளத்தினுக் குதவி' எனவும்,

'விண்ணி டிந்து விழுந்திடு மாயினும்
மண்ணில் நீதி வழங்கக் கடவதே' எனவும்,

'மெய்ம்மைதேர் அறிவினை மேவி யுள்ளவர்
செம்மனப் பாக்கியச் சிறப்பின் ஒப்பிலார்;
தம்மைத்தாம் உடையர்; அத்தகைமை சார்ந்திலா
மம்மர்மன் னவரினும் சிறந்த மன்னரே' எனவும்,

'உண்மையி னும்முய ரொருமத மும்மிலை;
அனைத்துண் மையினுக் களவிலை யாதலால்
உண்மை யனைத்தும் உடைய மதமிலை;
உண்மை யொன்றும் உறுமத மும்மிலை;
எம்மதம் எவ்வள வுண்மையொ டியையுமோ
அம்மதம் அவ்வள வுயர்வின தாமால்;
மெய்யர் இவர்,பொய் வேடத் தினர்இவர்,
என்ன ஐயுற வின்றி அறியுமாறு
உள்ளத் துள்ளதை உணரவல் லார்க்கலால்

மற்றவர் உண்மை மதமறி வரிதால்;
மனிதனை மதத்தால் மதியா தொழுக்கால்
மதித்தலே உண்மை மதிப்பா குங்காண்;
"கருமமே யல்லது பிறிதென் கண்ட" தென்
றுரைசெய் கம்பன் உட்கருத் திதுவே,'

எனவும் வருபவற்றுள்ளே சால்பின்துறை பல செவ்வியுறத் தரப் பட்டிருத்தல் காண்க.

வெள்ளகால்கிழாரது வாழ்க்கையிலும் செய்யுளிலும் இயைந்து நின்ற சால்பின்பொலிவினை உற்றுநோக்குங்கால்,

'ஆற்றுத லென்பதொன் றலந்தவர்க் குதவுதல்
போற்றுத லென்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையார் சொன்னோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
....
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்,'

எனும் நல்லந்துவனார்கூற்று நினைவிற்கு வருகிறது.

இம்முதுபெரும்புலவர் நம்மனோரை நோக்கி, ருபேர்ட் பிரவுணிங் (Robert Browning) எனும் ஆங்கிலமகாகவியின் உரையே தம்முரையாக,

'என்னொடு
யாண்டுபல வாக நீவிநம் வாழுமின்;
காண்டகு செம்மை ஈண்டுதற் குரிய;
நாள்பல வாக நலம்பல பெறுகுவீர்;
வர்னுள்,
பின்னவைக் காக முன்னவை யியைந்தன;

"அனைத்தும் ஒருபிழம் பதனுள் இளமை
ஒருபாற் பயனை உணர்த்தும்; மற்றொருபால்
அமைதியுங் காண்மின்; அச்சம் அகற்றுமின்;
நாதனை நம்புமின்;" என அவன் நவின்ற
போதம் உளநம் வானுள் அனைத்தும்
அவன்திருக் கரத்தில் அமைந்தன கண்டீர்,'

என அறிவுரை கூறி வாழ்த்துவார்போலும்.

இவரை வாழ்த்திய தமிழ்ப்புலவரது செய்யுட்பாகங்கள் சிலவற்றைத் தருகின்றாம்.

'தொண்டை மண்டல முதன்மையோர் மரபினிற் றோன்றி
எண்டி சைச்கணுந் தன்பெயர் வழங்கவத் திருநீர்
மண்ட லத்தையாள் மன்னவர் மகிழ்வுடன் வழங்கு
திண்டி றற்பெறு பட்டமும் புனைதரு சீலன்'

'செந்த மிழ்க்கொரு தாயக மெனப்புவி செப்ப
வந்த மாமது ரைத்தமிழ்ச் சங்கசா வலரொ
டெந்த நாளுநற் றமிழ்தழைத் திடமுயன் றிடலே
முந்து மாதவ மெனக்கொளு முத்தமிழ்ப் புலவன்'

'மிக்க கேளிருக் கிளைஞரு மெய்ந்நெறி வழுவா
மக்க ளும்பிறர் யாவரு மாண்புபெற் றுயர்தற்
கொக்கு மென்றுதன் சொற்செயல் குணமெலா மொருங்கு
தக்க கட்டளை யாக்கொளத் திகழ்ந்திடு சதுரன்'

'மாசில் உள்ளம் தூய ஒழுக்கம்
ஈசற் கன்பு தேசுறு செல்வம்
என்னும் பெருமைகள் துன்னும்
....
திருவுடைச் சீர்சால் பெரியர்'

'தொண்டை மண்டலத் தொல்வே ளாண்குலப்
பண்டைநற் பண்புகள் பலவும் பாங்கினில்
விளங்குங் குலநல விளக்கே'

'பணத்தால் மேன்மைக் குலத்தால் நல்வங்
கணத்தால் உயர்கவி மணத்தால் ஆயிரம்
முழுமதி நோக்கிய செழுமையாற் பெரியோன்'

என அவையகத்தார் கூறிய இவையனைத்தும் இவர்க்கு ஒவ்வுவ வாதலின், யாமும் இவர்தாம்,

'குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின்பத்துத் தூங்கித் தீதறு
நடுவுநிலை நெடுநகர் வைகி வைகலும்
அழுக்கா றின்மை அவாவின் மையென
இருபெரு நிதியமும் ஒருதா மீட்டும்
தோலா நாவின் மேலோர்'

ஆமென அறிந்து உளமகிழ்வெய்துகின்றோம்.

பண்டைக்காலத்து நாகரிகம்

[ஸ்ரீ. த. இராமநாதபிள்ளையவர்கள், B.A., (LOND.)]

கசச-ஆம் பக்கத் தொடர்ச்சி.

சீனர்மதில்

இன்றும் வியப்பினைவிளைக்கும் மதில் கூ என்னும் கானவரைத் தம்நாட்டினுள் நுழையவிடாமல் காத்தற்கு ஆழிவேந்தன் ஷின்ஷி உவாங் என்பவனால் கி. மு. மூன்றும்நூற்றாண்டில் கட்டப்பட்டது. அக் கூவென்போரே ஹூணராயினர். அக்காவன்மதில் 200 மயில் நீளமும் 30 அடி உயரமும் 25 அடி அகலமும் உடையது. அம்மதில் கட்டப் பத்தாண்டு கழிந்தன. அதேகாலத்திலே தான் 10,000 மக்கள் கூடுதற்குரிய மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டது. உவாங்தி வேந்தனாக, பகைவர் யாண்டும் கலகம் விளைத்தனர். கி. மு. 207-ல் சே. யோ. கேயோ என்னும் வித்திலன் வேந்தனைக் கொன்றான்.

ஹான்வம்சம்

கி. மு. 206 முதல் கி. பி. 24 வரை ஹான்வம்சத்தினர் அரசாண்டனர். கி. மு. 206-ல் லியுபாங் என்பான் ஆழிவேந்தனாயினன். அவன்பட்டம் கே. யோசு என்பது. கி. மு. 193-ல் அவன் இறந்தான். அவனுடைய மகன் இளைஞனாகலின், தாய் அரசியலை நடத்தினாள். ஏழுவருடம் கழியுமுன் இளைஞன் இறந்தானாகத் தாய் முடிபெற்று அரசாண்டாள். அரசி தன் கொழுநனின் காமக்கிழத்தியின் கைகால்களை வெட்டிக் கண்ணைப் பிடுங்கி நாவையும் காதுகளையும் அரிந்தனள். அவ்வண்ணம் மானபங்கப்படுத்தியபின் அவளைச் சாணக்குன்றில் இட்டனள். அரசி இறந்தபின் அவளுடைய கொழுநனின் மற்றொரு காமக்கிழத்தியின்மகன் வேந்தனானான். அவன்

பெயர் வேந்தி என்பது. அவன் யாதொரு புத்தகத்தையும் எரிக்கப்படாதென விளம்பினன். அவன் வாசகசாலை ஒன்றை நிறுவினன். அவன் நீதிப்பிரமாணங்களை முறைவகுத்துக் கொடுங் குற்றம் செய்தோருக்கே கொலைத்தண்டனைவிதிக்கலாமென முரசறைவித்தான். அவன் ஒருவன்குற்றத்திற்காக அவன் குடும்பத்தினரைத் தண்டிக்கும்வழக்கத்தை நிறுத்தினுன்.

ஹூணர்

உவாங்நு என்னும் ஹூணர் சீனருடைய நாடுகளில் சூறையாடினர். ஹூணர் ராட்டறி மங்கோலியா என்னும் தேயங்களில் பட்டிமேய்த்துத் திரிந்த நாடோடிகள். அவர்கள் பெரிய அரசை நாட்டிச் சீனரைவென்றதுமன்றி உரோமருடைய இராச்சியத்திலும் சூறையாடினர். இந்த ஹூணரில் ஒருகூட்டத்தினரே இந்நாடு புகுந்து பெரிய இராச்சியம் ஒன்றை கி. பி. 5-ஆம் 6-ஆம் நூற்றுண்டுகளில் நாட்டினர். ஹூணரையே இந்தியர் அவுணர் என அழைத்தனர்போலும். இது நிற்க.

கி. மு. 156-ல் சிங் தி என்னும் மன்னன் ஹூணப்பெண்ணை மணமுடித்தபோதிலும் சீனருக்கும் ஹூணருக்கும் நட்பு ஏற்பட்டிலது. கி. மு. 140-ல் வூதி என்னும் வேந்தன் ஹூணரோடு பொருதான். சீனர் சாங்சங் என்னும் தூதனை அனுப்பி ஒக்கஸ் நதிக்கரையில் வதியும் சிதியரிடம் துணையிரந்தனர். இந்த சாங்சங் என்பவனே திராட்சைப்பழம் மாதுளம்பழம் என்பவற்றைச் சீனநாடுகளுக்குக் கொண்டுபோனுன். அக்காலத்திலே சீனர் பார்தியரோடு நட்பாயிருந்தனர். கொச்சின்சீனுவும் தொங்கின்நாடும் சீனருடைய ஆட்சிநாடுகளாயின. அவை கி. பி. 1000-ல் சுவாதீனம்பெற்றன.

கி. மு. 73-ல் ஆண்ட வேந்தன் சேயோ நிலவரியைப் பெறுது விட்டான். சிறைச்சாலைக்கணக்கன் ஒருவன் ஹசுவான் தி என்பவனைத் தீவினையாளரின்கையிலிருந்து தப்பவைத்தான். ஹசுவான்தி என்பவன் வேந்தனுனவுடன் சிறைக்கணக்கனின் மகளை மணந்து இராணியாக்கினுனம். கி. பி. 6-ஆம் ஆண்டு யுவான் என்னும் வேந்தன் ஹூணரோடு பொருதான். அவன் இறந்தபின் செங்தி

என்பவனும் ஆய் இத்தி என்பவனும் அரசுசெலுத்தினர். அவ் விருவரும்சிறுவர்களாகலின் அவர்களுடையபாட்டி பிங்தி அரசியலை நடாத்தினள். அவருடைய அமைச்சன் வாங்மாங் அவளை நஞ் சூட்டிக் கொன்று அரசை வௌவினன். அவன் நூல்நிலையங்கள் பல நாட்டினன். கி. பி. 23-ல் பகைவர் அவனைக் கொன்றனர்.

சிற்றரசுகள்

கி. பி. 23 முதல் கி. பி. 221 ஈறாக உள்ளகாலத்தில் மற்றொரு ஹான்வமிசத்தினர் அரசாண்டனர். அக்காலத்தில் பெண்கள் பலர் அரசுகட்டில் எறினர். அரசிகள் வித்திலரை அமைச்சராக்கி அரசியலைநடாத்தினர். அக்காலத்தில் வித்திலர் 2000 பேர் கொல்லப் பட்டனராதலால் மக்களை வித்திலராக்குதல் பெருவழக்கா யிருந்ததுபோலும். மக்களை வித்திலராக்கும் வழக்கம் சீனரா லும் துருக்கராலும் உரோமராலும் அராபியராலும் கையாளப் பட்டது. வேந்தன் சியன்தி என்பானைப் படைத்தலைவன் தங்சோ என்பவன் கொன்று அரசுகட்டில் எறினன். கி. பி. 192-ல் தங்சோ கொல்லப்பட்டான். செம்மார்குலத்தினன் ஒருவன் படைச்சேவை செய்து கி. பி. 185-ல் ஒரு தலைவனானன். அவனே தங்சோ என்பவ னைக் கொன்று அரசுபுரிந்தான். சீனா பல அரசுகளாகப் பிரிய, அரசியற்குழப்பங்கள் மிகுந்தன.

தென்சீனாவில் ஓர் இராச்சியம் நாட்டப்பெற்றது. அதன் தலைநகர் நாங்கிங். ஆங்கு சுன்சுயான் அரசனானன். அவனுடைய வம்சம் வூ எனப் பெயர்பெற்றது. அவன் தென்சீனாவில் ஆண்ட காலத்தில் வடசீனராச்சியத்தை வைவம்சத்தினர் ஆண்டனர். மற்றொரு அரசு மேற்குச்சீனாவில் ஷிஹான் என்பானால் நாட்டப் பட்டது. இம்மூன்று இராச்சியங்களும் கி. பி. 265-ல் இகலலாயின. மூன்றும் ஒன்றோடொன்று பொருது அழிவெய்தின. அக்காலத் தில் துங்கூசியர் என்னும் கானவர் சீனநாடுகளில் சூறையாடினர். பின்பு வடசீனா தென்சீனா என இரு அரசுகள் நிலைத்தன. வடசீனா கீத்தே(கதே) எனப் பெயர்பெற்றது. வடசீனாவில் கி. பி. 420-ல் சங்வம்சத்தினர் ஆண்டனர்; தென்சீனாவில் லியங்வம்சத்தினரும் அவர்பின் சேன்வம்சத்தினரும் அவர்பின் சுயி வம்சத்தினரும் அரசாண்டனர்.

தாங்வம்சம்

கி. பி. 589-ல் யாங்சியன் என்னும் படைத்தலைவன் அரசை வௌவினான். அவனுடைய மகன் தகப்பனைக் கொன்று வேந்தனாயினான். அவன் கி.பி.605-ல் நீர்வாய்க்கால்களை அகழ்வித்தான். அவன் அறிஞனாயினும் சிற்றின்பப்பிரியனும். இவனுடைய வம்சம் தாங்வம்சம் எனப் பெயர்பெற்றது. 'தாங்'வம்சத்தினர் கல்வியை வளர்த்தனர். அவர்காலம் சீனமொழியின் செம்மொழிக்காலமெனப்படும். புலவன் லிதைபோ என்பவனும் புலவன் துபி என்பவனும் பாடசாலைகள் பல நிறுவினர். வேந்தன் லியுவான் வித்தைவல்லோரையும் கலைவல்லோரையும் புரந்தான். அவன் மகன் கி. பி. 618-ல் கையோசுங் என்னும் நாமத்தைத் தரித்தான். கையோசுங் தன் தந்தையின் காமக்கிழத்தியாகிய வூகௌ என்பவளிடம் புத்திகேட்டான். அவள் பிறிதோர்காமக்கிழத்தியின் அவயவங்களை வெட்டினாள். கையோசுங் இறக்க வூகௌ கொடுங்கோல் செலுத்தித் தன் குமாரரைக் கொன்றாள். கி. பி. 705-ல் அவள் கொல்லப்பட்டாள். பின்பு 21 ஆண்டு வனவாசம்செய்திருந்த சங்சங் என்பான் அரசபதவியைப் பெற்றான். அவன் தன் மனைவிக்கு அஞ்சி நடந்தான். அங்ஙனம் ஒழுகியபோதிலும் அவனை அவள் நஞ்சூட்டிக் கொன்றனள். கி. பி. 713-ல் லங்சி அரசனானான். அவன் ஆடம்பரவாழ்க்கையை வெறுத்தோன். அவன் தன்குமாரரின் காமக்கிழத்தியாகிய யாங்கைபை என்பவளிடம் புத்திகேட்டொழுகினான்; அவள் அணிதற்கு இரத்தினம்வாங்கிப் பொருளெல்லாம் செலவுசெய்தான். வேந்தனைச் சேவித்த படைவீரன் ஒருவன் இடித்துரைத்தானாக அவனைக் கொல்லும்படி வேந்தன் கற்பித்தான். அவ்வளவிற் குழப்பம் தொடங்கியது. ஒருவர்பின் ஒருவராகப் படைத்தலைவரே முடிபெற்றனர். கி. பி. 919-ல் சேயோசங் அரசாண்டான்; கி. பி. 923-ல் அவனை லிற்ஷன்ஷி கொன்று முடிபெற்றான். கூத்தர் கலகம்விளைத்து லிற்ஷன்ஷி என்பவனைக் கொன்றனர். கி. பி. 932-ல் தான் முதல் முதல் அச்சிடுதல் தொடங்கியது.

சின்வம்சம்

சின்வம்சத்து முதல்வேந்தன் ஷி-சின்பாங் என்பான் கித்தரிடம் துணைபெறுதற்கு ஆண்டொன்றுக்கு 300,000 பட்டாடைகள் கொடுத்தானும். கித்தர் அவனைக் கலைத்தனர். சீனர் கித்தரோடு பன்முறை பொருதனர். கி. பி. 976-ல் தைசங் என்பான் கித்தரைக் கலைத்தோட்டினான். அவன் மகன் செங்சங் என்பான் கித்தருக்குப் பொருள்கொடுத்து நட்பாக்கினான். கி.பி.1064 முதல் 1068 வரையும் இங்சங் ஆண்டான். பின்னர் வெண்சங்சேக் சிறுவனாகலின் அவன்தாய் அரசியலை நடத்தினாள். கி. பி. 1086 முதல் 1100 வரையும் வித்திலரே அமைச்சராகி அரசியலை நடாத்தினர். கி. பி. 1126-ல் கின்னர் படையெடுத்துச் சீனவேந்தனைப் பிடித்தேகினர். கி. பி. 1127-ல் கேயோசங் என்பவன் நாங்கிங் என்னும் தலைநகரில் அரசுபுரிந்தான். அவன் கின்னருக்கு அஞ்சி காங்சௌ என்னும் நகரை இராசதானியாக்கினான். அவன் கின்னரை நட்பாக்குதற்கு இருநாடுகளை அவர்களுக்கு அளித்தான்.

மங்கோலிய ஹூணவேந்தன் சிங்கிஸ்கான்

கின்னரை ஹூணர் நெருக்கினர். கி. பி. 1230-ல் ஹூணர் பீக்கிங் நகரைக் கைப்பற்றினர். ஹூணர்மன்னன் சிங்கிஸ்கான் மங்கோலியா ருஷியா துருக்கி சீனு என்னும் தேசங்களை ஆண்டான். அவன் இறவாமருந்து தேடினானும். அவன் இறந்தபின், அவனுடைய மூன்றும் மகன் ஓகோதை அரசனாகித் திபேத்தையும் தனது ஆட்சிநாடாக்கினான். கி. பி. 1233-ல் அவன் கின்னரைக் கலைத்ததுமன்றிச் சீனர்வேந்தன் சங் என்பவனையும் சயித்தான். சீனர் தம் சுவாதீனத்தை இழந்தபோதிலும் அவர்கள் தம் நாகரிகத்தை அழியவிடவில்லை. ஹூணர் சீனரைவென்றனராயினும் சீனரோடுகலந்து தம் நாகரிகத்தை இழந்தனர்.

ஆழிவேந்தன் குபிலைக்கான்

ஹூணவேந்தருள் புகழ்பெற்றோனான குபிலைக்கான், கி. பி. 1260-ல் ஆழியுருட்டினான். அவனுடைய சந்ததியார் யுவான் வம்சத்தினர் எனப் பெயர்பெற்றனர். அவர்களுடைய ஆணை இந்தியசீனு என்னும் குடாநாடெங்கும் சென்றது. கி. பி. 1281-ல்

குபிலேக்கான் ஜப்பான்தீவுகளைப் பிடிக்கும்படி தன் கப்பற்படையை ஏவினன். கப்பல்கள் புயலில் அகப்பட்டு உடைந்தன. குபிலேக்கான் மங்கோலியமொழியில் சீனநூல்களைப் பெயர்ப்பித்தான். உலகமுழுவதும் பிரயாணஞ்செய்துபார்த்த இத்தாலியன் மார்க்கோப்போலோ குபிலேக்கானுடைய அவையைத் தரிசித்து ஆங்கு அரசாங்கசேவைசெய்திருந்து பல குறிப்புக்கள் எழுதினான். சீனமும் கடாரமும் இந்தியசீனாவும் திபேத்தும் குபிலேக்கானுடைய ஆட்சிநாடுகளாயினவாம்.

மங்கோலிய ஆழிவேந்தன் தீமூர்

ராட்டறிமன்னர் குபிலேக்கானுக்குத் திறையளித்திருந்தனர். தீமூர் என்பவன் ஆழிவேந்தருக்குத் திறைகொடாது சுவாதீனனாயினன். இத் தீமூர் தடமார்பன், வெற்றிவேலன், படைவல்லோன் எனப் புகழ்பெற்றான். தீமூர் மங்கோலியவேந்தருள் புகழ்மிக்கோன். அவன் மங்கோலியா, ராட்டறி வடசீனா, துருக்கி, பார்சியா என்னும் நாடுகளை ஆண்டான். தீமூர் ஒருமுறை இந்தியாவினுட் புகுந்து கங்கைக்கரைவழிச்சென்று சூறையாடி ஏகினன். தீமூர் அரசுபுரிந்தகாலத்தில் சீனாவில் புத்தமதம் புத்துயிர்பெற்றது. தீமூர் துஞ்சியபின் மங்கோலியருடைய வலி குன்றியது.

மிங்வம்சம்

கி. பி. 1368-ல் சன்யுவான்சங் மங்கோலியரைக் கலைத்துப் பீக்கிங்நகரில் அரசாண்டான். அவன்தான் மிங்வம்சத்தை நாட்டியவன். அவன் அன்னநாட்டாரிடம் திறைபெற்றான். மிங்வம்சத்தினர் ஆண்டகாலத்தில் மங்கோலியரும் சீனரும் இடைவிடாது பொருதனர். ஜப்பானியரும் சீனருடைய கரைநாடுகளில் இறங்கிச் சூறையாடினர். மிங்வம்சத்தினர் கலைகளை ஓம்பினர். கி. பி. 1409-ல் விண்ணூல் பூகோளநூல் ஆயுள்வேதம் மாந்திரிகநூல் பௌத்தநூல் தேயோநூல் என்பவை ஐவரால் இருபதின்மரின் துணையோடு 60 புத்தகமாகத் தொகுக்கப்பட்டன. ஓவியமும் புரக்கப்பட்டது.

மாஞ்சுவம்சம்

கி. பி. 1515-ல் போர்த்துக்கேயர் பீக்கிங் என்னும் தலைநகரில் பண்டமாற்றுச்செய்யத்தொடங்கினர். அக்காலத்தில் மஞ்சூரியா வில் உறைந்தோர் சீனத்துட் புகுந்து மிங்வம்சத்தினரைப் புடைத் துக் கலைத்தனர். பின்பு கி. பி. 1583-ல் மாஞ்சியர் இருகட்சியின ராகிப் போராடினர். சீனர் நுர்க்காச்சு என்பானுக்கு எதிராக நிக்கான் என்பானுக்குத் துணைபுரிந்தனர். நுர்க்காச்சு வென்றியடைந்து கி. பி. 1616-ல் சீனரோடு போர்தொடர்ந்தான். அவன் முக்டன் நகரைப்பிடித்து தன் இராசதானியாக்கினான். தைசாங் என்பான் பீக்கிங்நகரைத் தாக்கினான். நகரத்தோர் கட்சிபிரிந்து கலகப் பட்டனர். அத்தருணத்தில் மாஞ்சியர் வைகைகுவான் என்னும் போரில் வென்று பீக்கிங்நகரைப் பிடித்தனர். கி. பி. 1645-ல் மாஞ்சியர் நாங்கிங்நகரையும் கைப்பற்றி ஆங்கிருந்த மன்னனையும் கொன்றனர். சீனத்தில் மாஞ்சுவம்சத்தினர் மூன்று நூற்றாண்டு அரசுபுரிந்தனர். கி. பி. 1662-ல் மாஞ்சுவேந்தன் காங்ஷி மங்கோ லியரோடு போர்புரிந்தான். அவன் நீதிப்பிரமாணங்களை முறை வகுத்துச் செங்கோலோச்சினான். கி. பி. 1736-ல் அரசுபுரிந்த சி யென் லங் மங்கோலியரோடு பொருதான். அக்காலத்தில் இமய மலைச்சாரலில் வதியும் நீர்வளநாட்டினர் சீனரோடு பகையாயினர். கி. பி. 1796-ல் சீனத்தில் சியாங்சிங் என்னும் மாஞ்சுமன்னன் ஆணை செலுத்தினான். அவன் ஆண்டகாலத்தில் கலகக்காரர் அரசியலைக் குலைக்கச் சூழ்ச்சிசெய்தனர்.

சீனரும் மேனாட்டாரும்

19-ஆம் நூற்றாண்டில் மேனாட்டார் சீனரோடு வாணிகஞ் செய்யவிரும்பினர். ஆங்கிலதூதன் ஒருவன் சீனவேந்தனின் அவை யில் நிலத்தில் வீழ்ந்து மரியாதைசெய்யநேரிட்டது. அங்ஙனம் மரியாதைசெய்தலை ஆங்கிலர் வெறுத்தனர். கி. பி. 1846-ல் ஆங்கிலர் சீனமன்னருடைய வேண்டுகோளைப் பொருட்படுத்தாமல் சீனரோடு அபின்வியாபாரம் செய்தனர். சீனர் அபின்வியாபாரத் தை நிறுத்தமுயன்றனராக ஆங்கிலர் போர்முரசறைந்தனர். ஆங்கிலர் இந்தியப்படைகளை ஏவிப் போரைநடாத்தினர். சீனர்

கட்சிபிரிந்து கலகப்பட்டிருந்தமையால் தோல்வியடைந்தனர். கி.பி. 1858-ல் ஆங்கிலர் தம் படைவலியால் ஐந்து துறைகளில் பண்டம் மாற்றும் உரிமைபெற்றனர். இதை அறிந்த பிராஞ்சியரும் சீனரை வெருட்டி வணிகவுரிமை பெற்றனர். பின்னர் சர்மானியரும் ருஷியரும் சிலதுறைகளில் தம்மாணையைச் செலுத்தத் துணிந்தனர்.

கிறித்துமதம்

கி. பி. 505-ல் உரோமரும் கிரேக்கரும் சீனத்துக்குச்சென்று பட்டுப் பெற்றனர். கி. பி. 845-ல் உரோமருடைய வாணிகம்கெட, அராபியர் வாணிகம்செய்யத்தொடங்கினர். அராபியர் பலர் சீனத் துறைகளில் உறைந்து முகமதியமதத்தைப் பரப்பினர். கி. பி. 1248-ல் கதலிக்கர்சமய முதற்குரு இன்னசந்து என்பவரும், பிராஞ்சு தேசமன்னன் லூயி என்பவனும் சிங்கிஸ்கானுக்குத் தூது அனுப்பினர். கதலிக்கர்குரு பிராஞ்சிஸ்சேவியர் தம் மதப்பிரசாரம்செய்வதற்குச் சீனத்திற்குச்சென்றார். கி. பி. 17-ஆம் நூற்றாண்டில் கிறித்தவர் மதவேற்றுமைபாராட்டிக் கலகப்பட்டமையால் சீனவேந்தரால் துன்புறுத்தப்பட்டனர். மேனாட்டுப் பல்வகைக் கிறிஸ்தவமதத்தினரும் தத்தம் மதத்தைப் பரப்பமுயன்றமையால் கலகம்விளைந்தது. சீனர் பெருந்தொகையினர் கதலிக்கர்மதத்தைத் தழுவினர்.

கிறிஸ்தவமதத்தினன் சன்யாட்சேன் மாஞ்சுவேந்தனுக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தான். சீனவரசியற்புரட்சிக்குச் சன்யாட்சேன் என்பவனே பாத்திரன் என மொழியலாம். 1912-ல் குடிகள் வேந்தனைக் கலைத்துக் குடியரசை நாட்டினர். மேனாட்டார் கட்சிகளுக்குப் படைக்கலங்கள் உதவிப் பொருளீட்டினர். சீனர் வடசீனர் தென்சீனர் எனப்பிரிந்து அமர்புரிந்தனர். அதன்பின் 1932-ல் ஜப்பானியர் சீனரை ஓட்டிக் கலைத்து மஞ்சூரியாவைத் தம் ஆட்சிநாடாக்கினர். ஜப்பானியர் அவ்வளவில்நில்லாமல் சீனம் முழுவதையும் ஆளமுயலுகின்றனர். 1938-ல் ஜப்பானியர் சீனக்கடலில் தம்மாணையைச் செலுத்தவெண்ணிச் சீனத்தின் தலைநகராகிய நாங்கிங் நகரையும் வணிகத்துறைகள் பலவற்றையும் கைப்பற்றினர். இங்ஙனம் ஜப்பானியர் ஆங்கிலர் முதலிய மேனாட்டினர் சீனத்துறைகளில்செய்யும் வணிகத்தைத் தாம்தாம் செய்ய முயலுகின்றனர்.